<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 150/2018 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.சுரேஷ் | | | |
| **Date** | : | **01.07.2026** | | | |
| **Time** | : | **1.09 p.m to 1.43 p.m** | | | |

<u>ம.த.சா.**1.**திரு.சுரேஷ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

இந்த மனுவில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் அனைவரும் வக்காலத்தில் கையொப்பம் இட்டு உள்ளார்களா என்றால் இட்டு உள்ளார்கள் மனுவிலும் தனித்தனியாக கையெழுத்து போட்டு உள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள். இந்த மனுவில் சம்பந்தப்பட்ட 19 தொழிலாளர்கள் எந்த தேதியில் வேலைக்கு சேர்ந்தார்கள், அவர்கள் வாங்கிய Stipend எவ்வளவு மற்றும் எந்த தேதியில் பணி விடுவிப்பு செய்யப்பட்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் என் Batch-ல் உள்ள தொழிலாளர்கள் பொறுத்து மட்டும் எனக்கு தெரியும் முழுவதுமாக தெரியாது. என் batch-ல் சேர்ந்த தொழிலாளர்கள் வாங்கிய Stipend, வேலையில் சேர்ந்த தேதி மற்றும் பணிவிடுப்பு செய்யப்பட்ட விவரம் சம்பந்தமாக ஆதாரம் எதுவும் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா? என்றால் இல்லை அது சம்பந்தப்பட்ட விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா? என்றால் சொல்லப்பட்டுள்ளது. அனைத்து தொழிலாளர்களும் வேறு வேறு தொகையை கேட்டு மனு போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். வழக்கில் சம்பந்தப்பட்ட மற்ற தொழிலாளர்கள் அவர்கள் சார்பாகவும் இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க எனக்கு அங்கீகாரம் கொடுத்து உள்ளார்களா என்றால் இல்லை. ஆனால் நான் அவர்கள் சார்பாகவும் சாட்சியம் அளிக்கும் விவரம் அவர்களுக்கு தெரியும். என்னையும் தியாகராஜனையும் தவிர வேற யாரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சிமளிக்கவில்லை என்றால் எங்கள் இருவரை மட்டும் தான் சாட்சி அளிக்க அழைத்தார்கள். என்னையும் தியாகராஜனையும் தவிர மற்ற தொழிலாளர்களுக்கு இந்த வழக்கை மேற்கொண்டு நடத்த ஆர்வம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மற்ற தொழிலாளர்கள் யாரும் அவர்கள் சார்பாக நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அங்கீகாரம் இதுவும் கொடுக்காத காரணத்தினாலும் மற்ற மனுதாரர்கள் யாரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினாலும் அவர்களை பொறுத்து எந்த வித பரிகாரமும் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் உள்பட அனைத்து மனுதாரர்களும் வேறு வேறு வேலையில் இருக்கும் காரணத்தினால் தான் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. 19.03.2011

அன்றுதான் நான் கடைசியாக எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்றால் ஆமாம். அந்த மாதத்திற்கான ஊதியம் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் நேரடியாக கொடுத்தபோது நான் வாங்க மறுத்து விட்டேன் பின்னர் தபால் மூலம் காசோலையாக அனுப்பியதை நான் பணமாக்கி கொள்ளவில்லை. என்னுடைய தகுதிகாண் பருவநிலை குறித்து ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் தகுதிகாண் பருவநிலை முடிந்த பின்னர் இரண்டாவது முறையாக அதை நீடித்து தகுதிகாண் பருவத்தில் வைத்தார்கள் அந்த காலமும் முடிவடைந்த பின்னர் பணி விடுவிப்பு செய்து வைத்தார்கள். ரூ.44,94,000/- எந்த காலகட்டத்திற்கு கேட்கப்படுகிறது என்றால் தொழிற்சாலை ஆய்வாளர் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என பிறப்பித்த உத்தரவு தேதியிலிருந்து மனு தாக்கல் செய்த தேதி வரைக்கும் கணக்கீடு செய்து கேட்கப்படுகிறது. மனுவில் குறிப்பிட்டிருக்கும் தொகைக்கும் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் வேறுபாடு உள்ளது என்றாலும் எதனால் அந்த வேறுபாடு ஏற்பட்டது என்பதற்கான விளக்கத்தினை சொல்லி உள்ளேனா என்றாலும் மனு தாக்கல் செய்த போது அன்றைய தேதி வரை கணக்கிட்டு அந்த தொகையும் சாட்சியம் அளிக்கும் போது அன்றைய தேதி வரை உள்ள தொகையும் கணக்கிட்டு தாக்கல் செய்திருப்பதால் வேறுபாடு

காணப்படுகிறது. ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரே விதமான தொகையை நாங்கள் கேட்கிறோமா அல்லது வருடா வருடம் தொகையை கூட்டி கேட்கிறோமா என்றால் ஒரே தொகை தான் கேட்கப்படுகிறது வருடா வருடம் தொகை கூட்டி கேட்கப்படவில்லை. நான் கடைசியாக வாங்கிய மாத சம்பளத்தின் அடிப்படையில் தொகை கேட்கப்படுகிறதா என்றால் இல்லை. 480 நாட்கள் முடிவடைந்த பின்னர் 481 வது நாளிலிருந்து நிரந்தர தொழிலாளி என்ன ஊதியம் வாங்குகிறாரோ அதன் அடிப்படையில் கணக்கிட்டு வழங்க வேண்டும் என கேட்டு உள்ளோம். நிரந்தர தொழிலாளி வாங்கிய சம்பளத்தை காட்டுவதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் உயர்நீதிமன்றத்தை தாக்கல் செய்யப்பட்டது இங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என தெரியவில்லை. சம்பத் என்பவரின் மாத ஊதியம் ரூ.26,000/- என காட்டுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. 19.03.2011 அன்று நான் பணி விடுவிப்பு செய்யப்பட்ட பின்னரும் சம்பத் என்பவர் பணியில் தொடர்ந்து இருந்து வந்தார் என்றால் ஆமாம். இந்த மனுவில் சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலாளர்களும் சம்பத்தின் ஊதியத்தின் அடிப்படையில் தான் கணக்கீடு செய்து கோரிக்கை வைத்திருக்கிறோம் என்றால் ஆமாம். மனுதாரர்கள் என்ன Stipend வாங்கி வந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது அது ம**.**சா**.**ஆ**.25**

ஆகும். 2016ம் ஆண்டுக்குப் பிறகு நாங்கள் யாரும் பணியில் இல்லாத காரணத்தினால் எங்களுக்கு போனஸ் வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 18.01.2016 தேதியிட்ட கடிதம் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். அதற்கு பதில் அளிக்கவில்லை. WP and WA நிலுவையில் இருந்த காலகட்டத்தில் நாங்கள் யாரும் பணியில் இல்லை என்றால் ஆமாம். நான் அளிக்கும் சாட்சியம் எனக்கு மட்டும்தான் பொருந்தும் என்றாலும் 17 நபர்கள் இந்த மனுவில் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்னுடைய சாட்சியம் பொருந்தாது என்றாலும் சரியல்ல. 19.03.2011 நான் கடைசியாக வேலை செய்திருக்கிறேன் என்பதாலும் அதன் பின்னர் வேலை கேட்டு நான் வழக்கு எதுவும் போடாத காரணத்தினாலும் நான் 19.03.2011 தேதி வரை தான் கேட்க முடியும் என்றாலும் WP and WA தாக்கல் செய்திருந்த காரணத்தினால் எங்களுடைய கோரிக்கை அதில் தீர்மானிக்கப்படும் என தெரிவித்ததன் அடிப்படையில் நாங்கள் தனியாக எங்களுக்கு வேலை வழங்காதது சம்பந்தமாக தொழிற்தாவா எதுவும் எழுப்பவில்லை. WP and WA ஆகியவற்றில் எங்களுக்கு பணி வழங்க வேண்டும் என உத்தரவு எதுவும் இருந்ததா என்றால் இருந்தது. உயர்நீதிமன்றத்தில் அதுபோன்று எங்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும் என உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றாலும் எங்களுடைய பணி விடுவிப்பிற்கு பின்னர் பணி வழங்க வேண்டும் என

கேட்டு தொழிற்தாவா எதுவும் எழுப்பாத காரணத்தினால் இந்த கோரிக்கை மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரி அல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:01.07.2026.